# பாடுகளை தியானிக்க

மறைத்திரு. ஜா. அமிர்தராச சுந்தர்

***முன்னுரை:***



ஆண்டுக்கு ஒரு முறை வந்து போகின்ற ஒரு சடங்காக இந்த தவக்காலம் அமைந்து விடுமேயானால், அதனால் யாருக்கு எந்த பயன்? வெத்துச்சடங்கும், வீணான வழிபாடும் நம்மை புனிதப்படுத்திடப் போவதில்லை. அர்த்தமுள்ள வழிபாடாக ஆக்குவதுவும், வாழ்நாளை அர்த்தமுள்ளதாக்குவதுவும் நம்முடைய கரங்களில் தான் உள்ளன.

இந்த ஆண்டு தவக்காலத்தை வாழும் திருத்தந்தை ஆத்தமுள்ளதாக்க தர்மம் செய்யுங்கள். மறைவாயுள்ளதை காணும் உங்களது தந்தையும் உங்களுக்கு பிரதிபலன் அளிப்பார், என்கிற சிந்தனையில் சிந்திக்க அழைக்கிறார். கொடுங்கள். அமுக்கி குழுக்கி சரிந்து விழும் படி கொடுங்கள். உங்களுக்கும் கொடுக்கப்படும். எந்த அளவையால் நாம் அளக்கிறோமோ, அதே அளவையால் நமக்கும் அளக்கப்படும் என்றுரைத்தார் நம் ஆண்டவர். எனவே அதே மனநிலையோடு சிந்திக்க தியானிக்க முன் வருவோம்.

அற்புதமான பயணம் இது. கொடுத்ததெல்லாம் கொடுத்தார். யாருக்காக கொடுத்தார். ஒருத்தருக்கா கொடுத்தார். இல்லை ஊருக்காக கொடுத்தார். தம் வாழ்வையே கொடுத்தார். எல்லாரும் வாழ்வு பெறும்படி தம் வாழ்வையே கொடுத்தார். பதினான்கு நிலைகள் சிந்திக்க தூண்டும் அற்புதமான நிலைகள். தம்மையே முழுவதுமாக கொடுத்திட்ட நம் ஆண்டவரின் பாடுகளை தியானிக்க தகுந்த நேரமிது. நம்மையும் கொடுக்க தூண்டும் நிலைகளை தியானிப்போம். வாழ்வாக்கும் அருளை கேட்போம். கொடுப்பதில் நம்முடைய பேறுடைமையை காட்டுவோம்.

***மன்றாடுவோம்.*** தூய ஆவியை நான் உங்களுக்கு கொடுப்பேன் என்றவரே. உமது ஆவியை எங்களுக்கு தாரும். நான் தியானிக்க, அசைபோட்டதை வாழ்வாக்க உமது ஆவியை எங்களுக்கு தாரும். அவரின் துணையோடு நாங்கள் எங்களது வாழ்வில் பெற்ற எல்லா கொடைகளையும் பகிரும் மனப்பாங்கோடு பொதுநன்மைக்காக பகிர்ந்து வாழ வரம் அருளும். ஆமென்.

## *முதல் நிலை: நல்ல தீர்ப்பு கொடுப்போம்.*

நானும் உனக்கு தீர்ப்பு தரவில்லை. சமாதானமாக போ. யோ 08



மனிதனை படைத்த இறைவன் நல்லது எனக்கண்டார். எல்லா மனிதர்களுமே மண்ணில் பிறந்த யாவருமே நல்லவர்களே. அவர்களது வளர்ப்பில் தான் உள்ளது என்றான் கவிஞன். மற்றவர்களில் உள்ள நல்லவைகளை காணும் மனிதன், தானும் நல்லவனாகி, மற்றவர்களையும் நல்லவனாக்குகிறான் என்பதுவே உண்மை. நல்ல சமூகம் படைக்க விரும்பும் எந்த மனிதனும் தன்னிலே நல்லதை காணவும், பிறரிலே நல்லதை காணவும் கடமைப்பட்டிருக்கிறான். நல்லதை காணும் எந்த மனிதரும் தான் வாழும் சமூகத்திறகு நல்லது செய்கிறான். இருளை பழிப்பதற்கு மாறாக ஒளியையேற்றுவது என்பது இதுதான்.

இவள் பாவி என்ற குற்றம் சுமத்தி, மோசேயின் சட்டத்தை சுட்டிக்காட்டி கல்லால் எறிந்து கொல்ல கொண்டு வந்த பெண்ணை கொடூரர்கள் கையில் இருந்து காப்பாற்றி சமாதானமாக அனுப்பி வைக்கும் இவருக்கு சமூகம் கொடுப்பதுவோ தவறான தீர்ப்பு. கோழையான பிலத்து இவர் நல்லவர் என்று அறிந்தும், தவறான தீர்ப்பினை கொடுத்து கொடூரமான கொலைக்கு கையளித்து தன் கையை கழுவுகிறான்.

தியானிப்போம். மனிதரில் காணும் நல்லவைகளை பெருந்தன்மையான மனப்பாங்கோடு கண்டு அவர்களை ஊக்கப்படுத்திட மனமுவர்ந்து நல்ல தீர்ப்பினையே இனிவரும் காலங்களில் கொடுப்போம் என்ற உறுதியை ஏற்போம்.

***மன்றாடுவோம்.***

எங்களில் நல்லவைகளை தந்து எங்களை எப்பொழுதும் ஆசீர்வதிக்கின்ற எங்கள் தெய்வமே, நாங்களும் உம்மைப்போல பிறரில் உள்ள நல்லவைகளை இனம் கண்டு அவர்களை ஊக்கப்படுத்தி, நல்ல சமூகத்தை காண வரம் தாரும் இயேசுவே.

## *இரண்டாம் நிலை: தோள் கொடுப்போம்.*

ஒருவர் ஒருவரது சுமைகளை தாங்கிக் கொள்ளுங்கள்.



தள்ளாடி வரும் மனிதர்கள் தரணியிலே இன்று பலர் உண்டு. பல காரணங்களுக்காய் தள்ளாடுவோர் நம்மில் பலர் உண்டு. அது கொழுப்பு. அது அவன் தலையெழுத்து. அது எங்க முன்னேற போகுது, என்றெல்லாம் நாம் பேசி வாடுவோருக்கு மேலும் சாட்டையடி நாம் கொடுப்பவர்களாய் இல்லாமல், அழுவாரோடு அழுங்கள் என்ற வாக்கினையேற்று நாம், அவர்களது சுமைகளை தாங்கிட தோள் கொடுப்போமேயானால், அது தான் இன்றைய கால கட்டத்திற்கு நாம் செய்யும் உயர்ந்த சேவையாகிட முடியும்.

இன்று பல முதியவர்கள் கூட தங்களது தள்ளாத வயதிலும், தடுமாற்றத்திலும் தாங்கள் உழைத்துத் தான், தங்களது வயிற்றைக் கழுவிக் கொள்ள வேண்டிய நிலை நம் பாரதத்தில் பலருக்கு உண்டு. அவர்களை பார்க்கும் பொழுதெல்லாம் விறகு சுமந்து, வண்டியிழுத்து, வீடுகளில் பாத்திரங்களை கழுவி, குப்பைகளை அள்ளியெடுத்து உழைப்பதை பார்க்கும் பொழுது, இந்த தள்ளாடும் மனிதர்களுக்கு நாம் என்று தோள் கொடுக்க போகிறோம்.

இயேசு நம் பாவங்களுக்கு அடையாளமான சுமையாகிய சிலுவையை சுமக்க தோள் கொடுக்கிறார். நம்முடைய பாரங்களை இறக்கி வைக்க அவர் தன் தோள் கொடுக்கிறார். எசாயாவில் கூறும் போது மெய்யாகவே அவர் நம் பிணிகளை ஏற்றுக் கொண்டார், நம்முடைய நோய்களைச் சுமந்து கொண்டார் என்கிறார். இத்தகையவராகவே அவர் மண்ணுலகில் மனிதரானார்.

***மன்றாடுவோம்:***

இயேசுவே, எங்களின் பாரங்களை சுமக்க நீர் உம் தோள் கொடுத்தீர். எங்களது தோளையும், நாங்கள் பிறரது சுமைகளை சுமக்க கொடுத்திட, இதன் வழியாக நாங்கள் உம் சாட்சியாக வரம் தாரும்.

## *மூன்றாம் நிலை: நம்பிக்கை கொடுப்போம்.*

தளர்ந்து போன கைகளை திடப்படுத்துங்கள்.
தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள்.



அவநம்பிக்கையிலே இந்த தரணி இன்று வாடுகிறது. எல்லாம் வீணிலும் வீண் என்ற எண்ணத்திலே இன்று வாழ பிடிக்காது மண்ணிலே வாழ்வோர் இன்று வீழ்ந்தே கிடக்கின்றனர். நம்பிக்கை என்பது துளி கூட இல்லாது, ஏன் இன்னும் உலகில் வாழ வேண்டும் என்ற கேள்வியை கேட்டு, பயனற்று கிடப்போர் எண்ணிக்கை இன்று அதிகமாகி கொண்டே இருக்கிறது. காலத்தை இன்று மனிதன் வென்றெடுத்தாலும், காட்சியை இன்று கையடக்க பெட்டிக்குள் கொணர்ந்து விட்டாலும், கேளிக்கைகள் கோமாளித்தனங்கள் இன்று கொடி கட்டி பறந்தாலும், மனிதனின் மனம் ஏனோ இன்று விரக்தியின் உச்சத்துக்கே சென்றிருக்கிறது என்பது தான் உண்மை.

நம்மை படைத்தவர். நம்மை வாழச் செய்பவர். நம்மை வழிநடத்துபவர், நம்மை நம்பிக்கையின் நட்சத்திரங்களாக வாழவே அழைக்கிறார். மனிதன் வீழ்ந்தாலும், எழுந்து நடக்கின்றார். லட்சியத்தின் பயணம் இது. இடர்கள், இடர்பாடுகள், நம்மை வீழ்த்தினாலும், எழுவது தான் மனித வாழ்வு. நம்மிடையே லட்சியத்தின் குறிக்கோள் தெளிவு இருக்குமாயின் நாம் நம்பிக்கையை ஊட்டி மற்றவர்களை, வீழ்ந்து கிடப்போரை எழுப்பி விட நம்மை பணிக்கின்றார். வாழ வழி தெரியாது சமூகத்தின் விளிம்புக்கு தள்ளப்பட்ட மாந்தர்களை சந்தித்து நம்பிக்கையினை கொடுத்து வாழ அழைக்கின்றார். எல்லா தரப்பட்ட மாந்தரும் ஒருங்கிணைந்து வாழ முன் வர வேண்டும். அதுவே இறையாட்சி என அறிவிக்கின்றார்.

### *மன்றாடுவோம்.*

நம்பிக்கையின் நாயகனே இறைவா, நாங்களும் இந்த மண்ணுலகின் பயணத்தில் எம்மோடு பயணிக்கும் மாந்தர்கள், அவநம்பிக்கையின் காரணிகளால் வாழ்விழந்து வீழ்ந்து கிடக்கும் போது, நல்ல சமாரியர்களாக நம்பிக்கையினை கொடுக்க வரம் தாரும்.

## *நான்காம் நிலை: சுத்தமான, சத்தான பார்வையை கொடுப்போம்.*

இச்சையோடு நோக்குபவன் ஏற்கனவே பாவம் செய்தவனாகிறான்.



இயேசுவின் பார்வை பலருக்கு வாழ்வு தந்தது. பலருடைய பாவங்களை போக்கியது. பலரை வாழ செய்தது. பார்வைக்கு சக்தியுண்டு. பார்வையால் பல நூறு காரியங்களை பரிமாற முடியும். நல்லவைகளையும், தீயவைகளையும் பரிமாற முடியும். அன்னை மரியின் பார்வை இங்கு மகனுக்கு சத்தாக இருந்தது. பாதையின் களைப்பில் சோர்வு தட்டினாலும், தாயின் பார்வையால் தன்னுடைய லட்சிய தெளிவு பெற்றார் மகன் இயேசு. தாயுக்கும் இயேசுவின் பார்வையால் சக்தி பிறந்தது. மகனை அவமானபடுத்தி இழுத்துச் செல்லும் காட்சியை பார்க்கும் தாயுக்கும் கொடூர வேதனை. வாள் உள்ளத்தை ஊடுருவியது. மனத்தில் இருத்தி அமைதி காக்கிறாள். சொல்லி அழ முடியாத துயர் வருத்திய வேளையில், மகனின் பார்வை தாயின் இருதயத்திற்கு மருந்திட்டது போலாகிறது.

இவன் பார்வையே சரியில்லையே. திருதிருன்னு முளிக்கிறத பார்த்தா இவன் ஏதோ தப்பு பண்ணியிருப்பான்னு நினைக்கிறேன். இவங்க பார்வையே சாந்தோஷமாக இருக்கு. என்ன ஒரு கனிவான பார்வை, அவங்க பார்வை. நம்முடைய பார்வை எந்த ரகத்தைச் சார்ந்தது. நாமும் நல்ல, சத்தான பார்வையை கொடுத்திட முடியும். அள்ளி கொடுக்க இயலாத நிலையிலும், வாரியிறைக்க வழியில்லாத நிலையிலும், பேதுருவின் பார்வை கோயிலுக்கு முன்பாக இருந்த பிச்சைக்காரனுக்குவாழ்வு தந்தது. இயேசுவின் நாமத்தில் உனக்கு நான் சொல்லுகிறேன் எழுந்து நட என்றார். அவனோ நடந்தான்.

***மன்றாடுவோம்:***

இயேசுவே விழிகளை கொடையாக்கினாய். இரு விழிகளையும் தந்து, ஒளிபெற செய்து, ஒன்றை நோக்கச் செய்தாய். அதுவும் நன்றாய் நோக்கச் செய்தாய். உடலுக்கே விளக்கு கண் என்றாய். புது பார்வை பெறச் செய்யும். சமூகத்தில் எங்களது நல்ல சத்தான பார்வையால் பலரின் வாழ்வில் ஒளியேற்ற வழி செய்யும்.

## *ஐந்தாம் நிலை: கரம் கொடுங்கள்.*



பார்வையில்லாதோர் பார்வையற்றவருக்கு கரம் கொடுத்திட இயலாது. பார்வையுள்ளோரே கரம் கொடுத்திட இயலும்.

சிமியோன் கட்டாயத்தின் பேரால் உதவி செய்தாரா இல்லையா என்பது நம்முடைய கேள்வியில்லை. வயலில் இருந்து திரும்பி வந்த மனிதரை பிடித்து உதவிட செய்தார்கள். அவருடைய செயல் நினைவு கூறப்படுகிறது. மனமுவந்து செய்யப்படுகின்ற காரியங்கள் போற்றத்தக்கது தான். ஆனால் சில வேளைகளில் கட்டாயத்தின் பேராலும் செய்யப்படுகின்ற காரியங்கள் போற்றப்படுகின்றன.

அவரு என்ன பெரிசா செய்திட்டார். சம்பளம் வாங்காமலா செய்தார். சம்பளம் வாங்கிட்டு தானே செய்கிறார். ஆமா இல்லையென்று சொல்லவில்லை. கவனிக்க வேண்டியது. சிலர் சம்பளம் வாங்கினாலும், கடமையென்றாலும் செய்ய வேண்டியதை செய்யாமல் இருக்கும் போது. கட்டாயத்தின் பேரால் செய்யப்படுகின்ற காரியங்கள் உயர்வானது தான். பெற்ற பிள்ளைகளை கைவிடுகின்ற பெற்றோர் உண்டே. பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோரை கைவிடுகின்ற பிள்ளைகள் உண்டே. கைபிடித்திட்ட அன்பர்களை உதறித் தள்ளுகின்ற ஆன்மாக்களை என்னவென்று சொல்லுவது. கரம் கொடுத்து வாழ்த்து சொல்லும் நண்பர்களை, கைகழுவுகின்ற துரோகிகளை எந்த கணக்கில் சேர்ப்பது. ஆபத்தில், தேவையில் கரம் கொடுத்திட்ட நல்லவாகளை நன்றி மறக்கும் மனம் இல்லாத மனிதக் கூட்டத்தை எப்படி அழைப்பது. இரு கரம் தந்த தேவன் கரம் பிடித்து நம்மை வாழ்வில் தூக்கி விடவில்லையா?

***மன்றாடுவோம்:***

எங்களுக்காக கரம் விரித்து பாடுபட்டவரே. தொலைந்த ஆட்டைக் கண்டு, தேடி கண்டு, கரங்களால் வாரி எடுத்து தோளில் சுமந்து கொண்டவரே, நாங்களும் எங்களது கரங்களினால், மற்றவர்களின் வாழ்வில் உதவிக்கரம் நீட்டி, படைத்திட்ட உம் நோக்கம் நிறைவேற்றி வாழும் வரம் தாரும் இயேசுவே.

## *ஆறாம் நிலை: கரிசனையை கொடுத்திடுவோம்.*



உங்கள் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பது போல, நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருந்திடுங்கள்.

அழும் தாயின் மடியில் கிடக்கும் பிஞ்சுக்குழந்தை தன் பிஞ்சுக்கரங்களால் தாயின் கண்ணீரை துடைக்க சொல்லித் தந்தது யார்? கரிசனை என்பது வாழ்வில் நம்மோடு கூடப் பிறந்த ஒன்று என்பதை ஒத்துக் கொள்வோமோ. பள்ளியில் பெறாதது, சந்தையில் வாங்க இயலாதது. நம்மோடு ஒட்டிப் பிறந்தது கரிசனை. எந்த கல் நெஞ்சக்காரருக்கும் உண்டு கரிசனை.

நம் வாழ்வின் சோகத்தில் நாம் பெறுவது, பிறரின் கரிசனையை. நோயின் படுக்கையில் தாயின் கரிசனைக்கு எது ஈடாக முடியும். தந்தையின் கரிசனையில் நம் வாழ்வில் எத்தனை மாற்றங்களை பெற்றிருக்கிறோம். உடன் பிறந்தாரின் கரிசனையில் தான் எத்தனை சுகம் உண்டு. நண்பர்களின் கரிசனையில் எத்தனைமுறை நாம் புத்துயிர் பெற்றது உண்டு. இவற்றிக்கெல்லாம் என்ன கைம்மாறு செய்திட போகிறோம்.

கூட்டத்தின் இடிபாடுகளிலும், போர் வீரர்களின் மனிதாபமற்ற செயல்களின் மத்தியிலும் தன் கரிசனையை காட்ட முற்பட்ட இந்த பெண்ணின் வீரத்தை போற்றிக் கொண்டே, நம்முடைய கரிசனையையும் தேவையில் உள்ளோருக்கு காட்ட முன் வருவோமா. இரக்கமுடையோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் தான் இரக்கம் பெறுவர். ஏன்பத இறைமொழி.

***மன்றாடுவோம்:***

இரக்கச் சிந்தனையோடு எல்லாரின் வாழ்வில், சந்தித்த எல்லாரின் வாழ்விலும், வளம் சேர்ப்பித்தவரே. எங்களுக்கும் உம்முடைய இரக்க சிந்தனையில் பங்கு கொடுத்து, வாழ்வித்தவரே, நாங்களும் கரிசனையை கொடையாக்கி பிறர் வாழ செய்திட வரம் தாரும்.

## *ஏழாம் நிலை: பலன் கொடுப்போம்.*



கோதுமை மணி மண்ணில் விழுந்தால் தான் மிகுந்த பலன் கொடுக்கும்.

நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த பாடுபட்டு உழைக்க வேண்டும் கடவுள் பணித்தது. மனிதனின் நியதி இது. படைக்கப்பட்ட எல்லாம் படைத்தவருக்கு பலன் கொடுக்க வேண்டும். பெற்றப் பிள்ளை தனக்கு பலன் கொடுக்க நினைப்பது மனிதனின் எதிர்ப்பார்ப்பு. பலன் கொடுத்திட நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த பாடுபட வேண்டும். பாடுபடுதல் என்பது இன்றைக்கு பைத்தியக்காரத்தனமாக அமைந்து இருக்கிறது. கடின உழைப்பு என்பது ஏதோ வேண்டாத செயல் போல கருதப்பட்டுக் கொண்டு வருகிறது. உழைக்க மனம் இல்லாதவன் உண்ணலாகாது என்றார் பவுல் அடிகளார். இன்றைக்கு உழைக்க விரும்பாத மனிதன், என்ன செய்தாகிலும் பணம் ஈட்டி பெரும் பணக்காரர் ஆகி விட வேண்டும். உயர நினைப்பது தவறில்லை. ஆனால் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். எப்படி வேண்டுமானாலும் சம்பாத்தியம் பண்ணிக் கொள்ளலாம் என நேர்மையான வாழ்வை தொலைத்த மனித கூட்டமாக மாறி வருகிறோம் என்பது வாழ்வின் நடைமுறையாகி வருகிறது.

சீராக் ஆகமம் 07: 15 சொல்லுகிறது. கடும் உழைப்பையும், உழவுத் தொழிலையும் வெறுக்காதே. கிராமத்தின் வளர்ச்சியில் தான் பாரதத்தின் முன்னேற்றம் உள்ளது என்றார் மகாத்மா. ஆன்மால் இன்று நகர் புறத்திற்கு ஓடிப் போய், கிராமங்களை புறக்கணிக்கும் மனித கூட்டம் நகர்புறத்தை வீங்கச் செய்து, வீணான தாதா வேலைகளில் ஈடுபட்டு கடும் உழைப்பை மறந்து, பிறரது வாழ்வில் தலைப்பட்டு தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரனாகி விடுகின்ற சூழல் அதிகரித்து வருகிறது, நாட்டின் அவலத்தையே காட்டுகிறது.

***மன்றாடுவோம்***. பலன் கொடுக்க உங்களது நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த பாடுபட வேண்டும் என்றவரே. ஒழுங்காக எங்களது வேலைகளை செய்து, நாங்கள் உண்ணும் உணவுக்காக உழைக்க, நிறைந்த பலன் கொடுக்க வரம் தாரும்.

## *எட்டாம் நிலை: கண்ணீரைக் கொடுப்போம்.*

இயேசு கண்ணீர் விட்டார்.



வாழ்வின் நிலைகளை பார்க்கும் போது பலருக்கு அழுகை வருவதுண்டு. யெருசலேம் பெண்கள் இயேசுவின் நிலைகண்டு கண்ணீர் வடித்தனர். இயேசு யெருசலேம் நகரை விட்டு வெளியேறி வந்து அதனை பார்த்து அழுதார். பேதுரு தன் நிலையுணர்ந்து, இயேசு சொன்னதையும் நினைத்து அழுதார். பழைய உடன்படிக்கை நூலில், யோசேப்பு, தன் சகோதரர்களின் நிலை கண்டு அழுதார்.

மனிதர்கள் நாம் எந்த நிலையிலாவது நம்முடைய வாழ்வின் ஓட்டத்தில் அழுவது உண்டு. இன்றைக்கு அழுவது என்பது வாழ்வின் கௌரவத்தோடு ஒப்பிட்டு பார்த்து, அழுவது என்பது தரம் குறைத்து விடும் என நினைத்து அழ மறுக்கின்றனர். அழுதால் தன்னை கோழையாக நினைத்து விடுவார்களோ என எண்ணி பல பேர் அழ மறுக்கின்றனர். இதனால் உடலிலே, மனதினிலே கணம் கூடி. பல நோய்களுக்கு ஆட் கொள்ளப்படுகின்றோம் என்பதுவே உண்மையாகிறது.

அழுகின்ற பிள்ளைத் தான் வாழ்வில், தாகம் தீர்த்துக் கொள்ளும். பேதுருவின் கண்ணீர் அவருக்கு மன்னிப்பைத் தேடித் தந்தது. கண்ணீரை கொடுப்போம். உங்களுக்காகவும், உங்களது பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்றார். நம்முடைய வாழ்வின் அவலமான நிலையை மாற்றிக் கொள்ள அழுவோம். நாட்டின் நிலை கண்டு அழுவோம். நீலிக்கண்ணீர் வடிப்பது அல்ல. மாறாக உண்மை அன்புடனே கண்ணீரைக் கொடுப்போம். அதுவே ஒருவேளை நம்மை சுத்திகரிக்கும்.

***மன்றாடுவோம்:***

இயேசுவே மனிதாபிமானத்தோடு யெருசலேம் நகரின் நிலை கண்டு அழுதீர். லாசரின் அன்பு அவரின் மரித்த உடல் கண்டு அழச் செய்தது. நாங்களும் எங்களது கண்ணீரை பயனுள்ள விதத்தில் விதைக்க வரம் தாரும்.

# *ஒன்பதாம் நிலை: இளைப்பாறுதல் கொடுங்கள்.*



சுமை சுமந்து சேர்ந்திருப்போரே, எல்லாரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன்.

பணிகளை செய்து விட்டு திரும்பிய சீடர்களை பார்த்து இயேசு, படகேறி அக்கரைக்கு செல்லுவோம். சற்றே இளைப்பாறுங்கள் என்றார். மூன்று நாட்கள் தொடர்ந்து தன் செய்திகளை கேட்டுக் கொண்டேயிருந்த மக்களை புல்தரையில் அமரச் செய்திட பணிக்கின்றார் இயேசு. உணவு பரிமாறுவகற்காக. இளைப்பாறுதல் அவசியமானது. தொடர்ந்து ஓடிக் கொண்டே இருக்கின்ற மனிதன் இளைப்பாற வேண்டும் என்றே, ஓய்வுநாளை உருவாக்கினார். 06 நாட்கள் படைத்த இறைவன் 07ம் நாள் ஓய்வெடுத்தார் என்கிறது மறை. மனிதனின் இயந்திரதனமான வாழ்க்கையில் இளைப்பாறுதல் அவசியமானதாகிறது.

பணம் பணம் என்று அலைகிற மனிதன் இன்று தானும் ஓய்வெடுக்காது, தன்னிடம் வேலை பார்க்கின்றவர்களையும் ஓய்வெடுக்க விடாது, வருத்திக் கொண்டே இருப்பதை பார்க்கிறோம். இதனால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன. மனிதனின் உடல் நிலை பாதிக்கப்பட்டு பல நோய்களுக்கு ஆளாகின்றான். மனபுழுக்கத்தால் மனநிலை பாதிப்புக்குள்ளாகிறான். சமூகம் இன்று இதனால் பெரிய பாதிப்புக்குள்ளாகிறது என்பது நிதர்சனமான உண்மை.

இளைப்பாறுதல் மனிதனின் உடல்நலனை பேணச் செய்வதோடு, தொடர்ந்து அவன் உழைப்பதற்கான தெம்பையும், உத்வேகத்தையும் பெற்றுக் கொடுக்க உதவுகிறது. அதனோடு இளைப்பாறும் மனிதன் தன் ஓய்வில் மன அமைதி, மனமகிழ்ச்சி பெற்று பூரண நலம் பெற வழி செய்கிறது.

***மன்றாடுவோம்:*** இறைவா, காலத்தின் கட்டாயத்தை உணர்ந்து, நாங்கள் எங்களது பணிகளிலும், பிறர் தங்களது பணியில் இளைப்பாறுதல் பெற்றுக் கொள்ளவும் ஆவண செய்திட அருள் தாரும்.

## *பத்தாம் நிலை: ஆடை கொடுங்கள்.*



உங்கள் அங்கியை எடுத்துக் கொள்ள விரும்பினால் உங்கள் மேலுடையையும் அவர் எடுத்துக் கொள்ள விட்டு விடுங்கள்.

தேவைக்கு மேல் வைத்திருப்போம் பிறருக்கு உரியதை பறித்திருக்கிறோம். எனவே நாம் திருடர்கள் என்றார் மகாத்மா. இன்று நம் ஒவ்வொருவருக்கும் தேவைக்கு மேல் பல உண்டு. நகைகள், ஆபரணங்கள், உடைகள், என பலவுண்டு. நாம் பதுக்கி வைத்துள்ள காரியங்களால் இன்று பலருடைய வாழ்வில் முதிர் கன்னிகளாக காலத்தை கண்ணீரால் கரைக்கும் மானுடத்தை நாம் கண்டு கொண்டேதான் இருக்கிறோம். எனவே தான் நம்முடைய பாரதத்தில் என்ன இல்லை. எல்லா வளமும் உண்டு. பற்றாக்குறை என்பதுவே இல்லை. பற்றாக்குறை எல்லாம் இங்கு பகிராத குறையே. இன்று பாரதத்தைப் பொறுத்த மட்டில் எது பற்றாக்குறையாக இருக்கிறது? பணங்கள், சில்லரைகள், ஆடைகள், ஆபரணங்கள், செருப்புக்கள் கூட இங்கு வகை வகையாக, விதம் விதம் ஆக வாங்கப்பட்டு, நாளைக்கு ஒரு சட்டை, உடையென உடுத்துவோர் நம்மில் பலர் உண்டு. விதவிதமான வண்ணங்களில் போடுவதற்கு என்று வாங்கி சேர்ப்போரும் நம்மில் பலர் உண்டு. இத்தகைய காரியங்களில் இன்று பணத்தை வாரியிறைக்க முற்படும் நாம், அவற்றை பதுக்கவும் முற்படுகிறோம். பூச்சியும், புழுவும் அரிக்க விடுவோம். திருடன் கன்னமிட்டு திருடவும் செய்கின்றான். ஆனால் மனதார யாருக்கும் எதையும் கொடுக்க முன்வருவதில்லை. பழையவைகளை கூட களைய முன்வருவதில்லை. செர்த்து சேர்த்து என்ன லாபம் பெற்றோம். பிறரின் கண்களுக்கு விருந்தளித்து, மற்றவர்களின் வயிற்றெரிச்சலை வாரிக் கொண்டோம் என்பது மட்டும் தான் உண்மை.

***மன்றாடுவோம்.*** இறைவா பரந்த மனம் தாரும். உம்முடைய ஆடைகளை களைய முற்பட்டு அதை தங்களுக்குள் பிரித்துக் கொள்ள முற்பட்ட போது, இவை நம்மை விண்ணகத்திற்கு அழைத்து செல்ல போவதில்லை என்பதை உணர்ந்து விட்டுக் கொடுத்தது போல நாங்களும் பகிர்ந்து கொடுத்து, எங்களது பெயர் விண்ணகத்தில் பொறிக்கப்பட்டுள்ளதா என்பதில் மட்டும் கவனம் செலுத்திட வரம் தாரும்.

## *பதினொன்றாம் நிலை: தானம் கொடுங்கள்.*



சரிபாத் கைம்பெண் இறைவாக்கினருக்கு உணவு கொடுக்க, இறைவாக்கினர், அந்த பெண்ணின் மகன் இறந்த போது, எலியா இறைவாக்கினர், அவன் மீது மூன்று முறை குப்புறபடுத்து, கடவுளிடம் மன்றாடி, உயிர்ப்பிச்சைவாங்கி கொடுத்திட்டார்.

தானம் செய்ய இன்று அரவு கூவி கூவி அழைக்கிறது. பலர் இன்று தங்களது பிறந்தநாளில் வீண் ஆடம்பரங்களை விடுத்து இரத்ததானம் செய்ய அழைக்கிறார்கள். பலர் இன்று தங்களது வாழ்வில் ஆபத்தில் இருப்போருக்கு இரத்ததானம் செய்து உயிர்பிச்சை அளிக்கிறார்கள். பலர் இன்று தங்களது உயிர் பிரியப் போகிறது. நான் என் உடல் உறுப்புக்களை தானம் செய்ய விரும்புகிறேன் என்று எழுதி வைத்து விட்டு மரிக்கிறார்கள். தாங்கள் வாழும் போதே இன்று பலர் தங்களது கண்களை எழுதி வைத்துவிட்டு இறப்புக்குப் பின்னர் தங்களது விழியை பிறருக்கு பொறுத்திப் பார்க்க முற்படுகிறார்கள். பிறர் வழி தொடர்ந்து இந்த புவியை பார்க்க விரும்புகிறார்கள். வளர்ந்துள்ள விஞ்ஞான உலகில் இன்று இது எல்லாம் சாத்தியம் தான்.

தன்னுடைய இறுதிச் சொட்டு இரத்தத்தையும் இந்த மண்ணிலே சிந்த செய்து, தன்னையே முழுவதுமாக சிலுவையிலே கையளிக்கின்றார். ஆடையை பறித்தவர்களுக்கு ஆடையை கொடுத்தார். கரங்களை விரித்து இரு ஆணிகளால் அறைய கொடுக்கின்றார். கால்களை பிணைத்து அடித்திடவும் கால்களை கொடுத்தார். கரங்களால் விழியில்லாதவனை தொட்டு, தன் தொடுகையின் வல்லமையை வெளிக்காட்டியதற்கா இந்த தண்டனை. எல்லா இடங்களுக்கும் செல்லுவோம். எங்கும் இறையாட்சியை அறிவிக்க வேண்டும் என்ற தாகம் கொண்டதாலோ இந்த தண்டனை. பச்சை மரத்திற்கே இந்த பாடு.

***மன்றாடுவோம்:***

இறைவா, எல்லாவற்றையும் கொடுத்து, நீர்கதியாய் நிற்கின்றீரே. அடிக்க கொண்டு போகும் கத்தாத செம்மறி போல இருக்கின்றீரே. நாங்கள் பெற்ற உறுப்புக்கள் அனைத்தும் எங்களுக்கு சொந்தமானது அல்ல. நீர் தந்திட்ட பிச்சையே என்பதை உணர்ந்து நாங்கள் பெற்றவைகளை உமது மகிமைக்காக பிறருக்கு தானம் செய்து, உம்மைப் போல நாங்களும் பிறரை வாழ வைக்க வரம் தாரும் இயேசுவே.

## *பனிரெண்டாம் நிலை: உயிரைக் கொடுப்போம்.*



தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு எவனிடமும் இல்லை.

எத்தனை எத்தனையோ காரணங்களுக்காக மனிதர்கள் உயிரைக் கொடுக்கின்றனர். இன்றைக்கு நம் பாரதத்தின் சுதந்திரத்திற்காக உயிரைக் கொடுத்திட்ட தியாகிகளை நாம் அறிந்திருக்கிறோம். மறைக்காக உயிரைக் கொடுத்திட்ட புனிதர்களை நாம் அறிந்திருக்கிறோம். தென்னக பகுதியில் கூட தூய அருளானந்தர் தன் இரத்தம் சிந்தி சாட்சி பகர்ந்த பூமி இன்னும் செம்மண்ணாகவே இருந்து வருவதோடு, அந்த தூயவரின் இரத்தம் பல நூறு மக்களின் விசுவாச வாழ்வின் வித்தாகியுள்ளது என்பதையும் நாம் அறிவோம். மகான்கள் பலர் தம் வாழ்வை பிறருக்காக தந்திட்டோர் நம்மில் உண்டு. இங்கு ஒரு மகான் தன் பாவத்திற்காக அல்ல, பிறர் பாவத்திற்காக அவமானத்தின் சின்னமாகிய சிலுவையில், இரு கள்வர்கள் நடுவில் உயிர் துறந்தார்.

உயர்ந்த லட்சியத்திற்காக உயிர் துறக்கும் மனிதர்களின் வாழ்வு என்றும் மக்களின் மனதில் அழியாத அற்புத சுவடாகவே பதிக்கப்படுகிறது. தன் நண்பர்களாகிய நம் வாழ்விற்காய் அவர் மரித்தார். நம்மை எல்லாம் தன் நண்பர்களாக ஏற்றுக் கொண்டார்.

நம்முடைய வாழ்வை காத்து கொள்ள விரும்பினால் அதை இழந்து விடுவோம். பிறருக்காக இழக்க முற்படுகின்றானோ அவன் அதை சுதந்தரித்துக் கொள்வான். நாம் பிறருக்காக நம் வாழ்வை கொடுக்க முற்படுகின்ற போது, நாம் நம்பி விசுவசிக்கும் மறுவுலக வாழ்வை பெற்றுக் கொள்வோம் என்பதுவே உறுதி.

***மன்றாடுவோம்:***

எங்களுக்காக மரித்தவரே, உம் தத்துவத்தை நாங்களும் கை கொண்டு ஒழுகி, நாங்கள் இலவசமாக பெற்ற வாழ்வை இலவசமாகவே மற்றவர்களின் ஏற்றமிகு வாழ்விற்காய் கையளிக்க வரம் தாரும்.

## *பதிமூன்றாம் நிலை: மடி கொடுப்போம்.*



தாயின் மடி தான் உலகம் அவள் தாளை பணிந்திடுவோம்.

தாயின் மடி ஆறுதலின் ஊற்று. இறந்த மகனை தன் மடியிட்டு தாய் இங்கு ஆறுதல் பெறுகின்றாள். இவள் ஆறுதல் பெற மற்றவர்களின் மடி தேட வேண்டிய நிலையில் இந்த தாய் இறந்த மகனுக்கு 33 வயதுள்ள இளைஞனை தன் மடியிட்டு, ஆறுதல் பெறுகின்றாள்.

தன் நண்பன் இறந்த செய்தி பெற்ற இயேசு, சகோதரிகளுக்கு ஆறுதல் சொல்லிட ஒடோடி செல்கிறார். மடி கொடுப்பது என்பது, ஆறுதல் தேடும் மனிதனுக்கு தன் மடி கொடுத்து தேற்றுவது. மடியிலிட்டு, தலையை கோதி விட்டு, ஆறுதலாய் நான் சொல் சொல்லும் போது எந்த மனிதனும் ஆறுதல் பெறுவது உறுதி.

ஆறுதலுக்காய் இன்று மனிதக் கூட்டம் அலைமோதுவதை பார்க்கிறோம். மனிதனைச் சுற்றி சுற்றி இன்று பல அவலமான காரியங்கள் அரங்கேறிக் கொண்டே வருகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் பல சோகங்கள் வாழ்வில் வந்து போய்க் கொண்டே இருக்கிறது. எல்லா மனிதனுமே இன்று ஆறுதலை எதிர்பார்க்கின்றான். ஆறுதலுக்காய் ஏங்குகின்றான். ஒரு ஆறுதல் வார்த்தை சொல்லமாட்டார்களா என ஏங்கி தவிக்கும் மனங்களுக்கு ஆறுதல் சொல்லுவதுவே இன்றைய மிக மிக அவசியமான பணியாகிறது. நானே இங்க கஷ்டப்பட நான் போய் யாருக்கு ஆறுதல் சொல்ல என எல்லாருமே இருந்து விட்டால், நாடு என்னவாகும். ஆறதல் பெறுவதை விட ஆறுதல் கொடுப்பதே நம் பணியாகட்டும். அசிசியார் இதனையே அற்புதமாக கூறுகிறார். நாம் கொடுக்கின்ற போதே நாம் பெறுகின்றோம். தன் வியாகுலத்தையும் மறைத்து ஆறுதலாய் இருந்திடத் தானே அன்னை மரியாள் தன் தனயனின் சிலுவைப்பாதையில் உடன் நடந்தாள். அந்த அலங்கோலமான நிலையிலும் மகனுக்கு அந்த அன்னையின் சந்திப்பு தெம்பு தந்தது. தன் மகனையே மடியிலிட்டு ஆறுதல் பெறுகிறாள்.

***மன்றாடுவோம்:*** அம்மா மரியே, வியாகுல தாயே, ஆறதல் தேடும் மாந்தருக்கு ஆறுதலாய் இருந்திட எங்களுக்கா உம் மைந்தனை மன்றாடும். இயேசுவே, ஆறதல் கொடுப்பதில் ஆர்வமுள்ளவராய் இருந்த ஆரோக்கியமான சமூகம் படைக்க வரம் தாரும்.

## *பதினான்காம் நிலை: ஆன்மாவைக் கொடுப்போம்.*



உங்கள் ஆவி, ஆன்மா, உடல் அனைத்தும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின் போது சீர்குலையாமல் குற்றமின்றி இருக்கும் படி காக்கப்படுவதாக.

ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் அவன் ஆன்மாவிற்குக் கேடு விளைந்தால், அவனுக்கு வரும் பயனென்ன? ஒருவன் தன் ஆன்மாவிற்கு ஈடாக எதைக் கொடுப்பான்?

எல்லாம் நிறைவேறியது என்பதை அறிந்த இறைவன் தன் தந்தையிடம் இதோ என் ஆவியை ஒப்படைக்கின்றேன் என்று கூறி உயிர் நீத்தார்.

அவருடைய வருகையின் போது, குற்றமில்லாது காத்து ஒப்படைக்க வேண்டியது நம் பொறுப்பு. மண்ணிலிருந்து உருவான உடல் மீண்டும் மண்ணுக்கே கையளிக்கப்பட போகிறது. ஆன்மாவை மனிதன் இன்று இழக்கச் செய்யும் நிலைகள் பலவுண்டு. ஆன்மாவிற்கு ஊறுவிளைவிக்கும் காரணிகளை இனம் கண்டு மனிதன் காத்து கொள்ள வேண்டிய கடமையில் உள்ளான்.

ஆன்மீக செறிவு கொண்ட பூமி பாரதம் என்பார்கள். இன்று பல மேல்நாட்டு மக்களை இத்தகைய ஆன்மீக தேடலோடு இங்கு அழைத்து வருவதும் உண்டு. ஆனால் இன்று பல மேல்நாட்டு கலாச்சார மோகத்தினால், அடிமைப்பட்டு சின்னதிரை, வெள்ளைத்திரை, விளையாட்டு, பணமே பிரதானம் என சொல்லி, உலகமே தஞ்சம் என்று, உலக போக்கின்படியே தன் வாழ்வை அமைத்து, தெய்வ அச்சம் இல்லாது வாழ்வில் வீம்பு பேசியே, பொழுதைக் கழிக்கிறான். ஆண்மாவை இழக்க துறக்க முற்படுகின்றான். ஆன்மாவை பத்திரப்படுத்தி கொடுக்க கடமையுண்டு என்பதை உணர்ந்து கொள்ள முன்வருவோம்.

***மன்றாடுவோம்:***

இறைவா, நலம் தருபவரே, உம் ஆன்மாவை குற்றமில்லாது காத்து, கொடுத்தவரிடமே கொடுத்து அவரது வலப்பக்கம் அமரும் பாக்கியம் பெற்றீரே. நாங்களும் நீர் மீண்டும் வரும் நாள் வரை எங்களது ஆன்மாவை காத்துக் கொள்ள வரம் தாரும்.

## *முடிவுரை:*



வாழ்வும், வழியும், உயிருமானவர் நானே என்றவரே.

வாழ்வின் பாதையில் உண்மை வாழ்வு என்பது என்ன என்று சொல்லித்தர உலகுக்கு வந்தவரே.

அந்த வாழ்வின் பாதைகளை தெளிவுற கற்றுக் கொடுக்க நீரே உம்மைத் தாழ்த்தி மனித அவதாரம் ஏற்று வந்தவரே.

வாழ்வின் பாதைகளில் கொடுப்பதற்கென்றே பல உண்டு என்று சொல்லிக் கொடுக்க பாடுகளையும் ஏற்றவரே.

உம்மிடம் கற்றுக் கொள்ள பல உண்டு என இன்று பயணிக்கும் எங்களுக்கும் உம் வாழ்வின் வழி கற்றுக் கொடுத்தவரே.

உம் வாழ்விற்கு செவி கொடுக்கின்றோம். எம் வாழ்வை மாற்றும் என மன்றாடுகின்றோம்.

கொடுப்பதில் தான் எங்களது பேறுடைமை உண்டு என எங்களுக்கு கற்றுக் கொடுத்தவரே. கொடுங்கள். அமுக்கி குழுக்கி சரிந்து விழும்படி கொடுங்கள். நீங்கள் எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் நானும் அளப்பேன் என்று சொன்னவரே.

தியானித்து இருக்கின்றோம். கொடுப்பதற்கும் எம்மில் பலவுண்டு என எங்களுக்கு உணர்த்தியிருக்கின்றீர். நன்றி கூறுகிறோம். பெற்றவைகளை தாராளமாக கொடுத்து, எங்களது வள்ளல்தன்மையை நிருபிக்க வரம் தாரும். நல்ல நிலத்தில் தூவப்பட்ட விதையை போல கேட்டவைகளை, தியானித்தவைகளை, அசை போட்டு வாழ்வாக்க வரம் தாரும். வாக்களித்த உம் ஆவியை எம்மில் தங்க செய்து, அவர் அருள் பெற துணை செய்யும். ஆமென்.


***Rev. Fr. Amirtha Rasa Sundar J.,***

Parish Priest
Church of Immaculate conception,
**CHIDAMBARAPURAM** - 627 754
Kuruvikulam (Via)
Tamil Nadu. South India

91 4636 284 261
94431 40660; 99447 58108
amirsundar@gmail.com